# இயேசுவே வாரும்

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். வெளி. 22:20

சகோ. காலேப் யோசுவா
Tele : 04630 - 256157

"ஓரேப்"
திருவைகுண்டம் - 628 601.
தூத்துக்குடி மாவட்டம்.

## மதமாற்றத் தடைச்சட்டமும் ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதலும்

1. பிரியமானவர்களே, பிதாவாகிய தேவனாலும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும், சமாதானமும் உண்டாவதாக. நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தவர், நம்மை இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தினின்று விடுவிக்கும்படி நம்முடைய பிதாவாகிய தேவனுடைய சித்தத்தின்படியே நம்முடைய பாவங்களுக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார். அவருக்கு என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்.

2. இந்து தேசம் (India) முதல் எத்தியோப்பியா தேசம் வரைக்கும் உள்ள நூற்றிருபத்தேழு நாடுகளை அகாஸ்வேரு ராஜா அரசாண்டு வந்தான். இவன் கிறிஸ்துவுக்கு முன் 486 - 465 (BC) வரை அரசாண்டான். ஆமான் ராஜ்யத்தில் உள்ள சகல பிரபுக்களுக்கும் மேலாக இருந்தான். யூதரின் சத்துருவாகிய இந்த ஆமான், ராஜாவிடம் சென்று ஒருவித ஜனங்கள் சிதறுண்டு பரம்பியிருக்கிறார்கள், அவர்களுடைய வழக்கங்கள் சகல ஜனங்களுடைய வழக்கங்களுக்கும் விகற்பமாயிருக்கிறது, அவர்கள் ராஜாவின் கட்டளைகளைக் கைக்கொள்கிறதில்லை, ஆகையால் அவர்களை அழிக்க வேண்டும் என்றான். ராஜாவும் அதற்கு சம்மதித்தான். ஆதார் மாதமான பன்னிரண்டாம் மாதம் பதின்மூன்றாந்தேதி சிறியோர், பெரியோர், குழந்தைகள், ஸ்திரீகள் ஆகிய சகல யூதரையும் அழித்துக்கொன்று நிர்மூலமாக்கவும், அவர்களைக்கொள்ளையிடவும் ராஜாவின் நாடுகளுக்கெல்லாம் கட்டளை அனுப்பப்பட்டது. யூதர்களுக்குள்ளே மகாதுக்கமும், உபவாசமும், அழுகையும், புலம்பலும் உண்டாயிற்று. யூதரின் சத்துருவாகிய ஆமானின் மனைவியும், ஆலோசனைக்காரரும் அவன் யூதகுலத்தை மேற்கொள்ள முடியாது, அவர்களுக்கு முன்பாக தாழ்ந்து போவது நிச்சயம் என்றார்கள். ராஜாத்தியாகிய எஸ்தர் என் ஜனத்தின் மேல் வரும் பொல்லாப்பை நான் எப்படிப் பார்க்கக்கூடும்? என் குலத்துக்கு வரும் அழிவை நான் எப்படிச் சகிக்கக்கூடும்? என்றாள். முடிவு என்ன? ராஜா, ராஜாத்தியாகிய எஸ்தரிடம் ஆமானின் வீட்டைக் கொடுத்தான். அவன் யூதர் மேல் தன் கையைப் போட எத்தனித்தபடியால் அவனை மரத்திலே தூக்கிப்போட்டார்கள். யூதர்கள் தங்களை விரோதிக்கும் சத்துருவாகிய ஜனத்தாரும், தேசத்தாருமான எல்லாரையும் அவர்கள் குழந்தைகளையும், ஸ்திரீகளையும் அழித்துக்கொன்று நிர்மூலமாக்க, அவர்கள் உடமைகளைக்கொள்ளையிட ராஜா கட்டளை பிறப்பித்தான். யூதருக்கு வெளிச்சமும், மகிழ்ச்சியும், களிப்பும், கனமும் உண்டாயிற்று. இது குறித்து விளக்கமாக நீங்கள் எஸ்தரின் சரித்திரத்தில் வாசிக்கலாம். ராஜாத்தி எஸ்தர், மொர்தெகாயின் சிறிய தகப்பன் குமாரத்தி. மொர்தெகாய் அவளைத் தன் குமாரத்தியாக எடுத்துக்கொண்டான். இந்த மொர்தெகாய், ஆமானை வணங்குவதும் இல்லை, நமஸ்கரிப்பதுமில்லை. ஆதலால் ஆமான், மொர்தெக்காய் மீதுள்ள கோபத்தில் அவன் ஜனமாகிய யூதரையெல்லாம் சங்கரிக்க வகைத் தேடினான். அதே போன்று ஒரு சில இடங்களில் கட்டாய மதமாற்றம் ஏற்பட்டது என்பதால் முழுச் சிறுபான்மை சமுதாயத்துக்கு விரோதமாகச் சீறுவதா? தேவனுடைய ஜனங்களை இதுவரை இந்த பூமியில் யாரும் மேற்கொண்டதாக சரித்திரத்தில் சான்றுகள் இல்லையே. இப்படியிருக்க தமிழ்நாடு அரசு கொண்டுவந்துள்ள இந்த மதமாற்றத் தடைச்சட்டத்தைக்குறித்து நமக்குள் பீதி ஏன்? தமிழ்நாடு அரசு யாருடையது? உன்னதமானவர் மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளகை செய்து, தமக்குச்சித்தமாயிருக்கிறவனுக்கு அதைக்கொடுக்கிறார். தானி.4:25,32. தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை. உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்கிறவன் தேவனுடைய நியமத்திற்கு எதிர்த்து நிற்கிறான். அப்படி எதிர்த்து நிற்கிறவர்கள் தங்களுக்குத் தாங்களே ஆக்கினையை வருவித்துக்கொள்ளுகிறார்கள். ரோ.13:1,2. இந்தியாவில் உள்ள எல்லா ஜனங்களிலும் நாம் சொற்பமானவர்கள் தான். ஆனால் பயப்படாதே சிறு மந்தையே என்பது தானே நம்மைத் தெரிந்து கொண்டவர் நமக்கு அருளிய வாக்குத் தத்தம். ஆதலால் அவர் நம்மை பகைக்கிறவர்களுக்குப் பிரத்தியட்சமாய் பதில் அளித்து அவர்களை அழிப்பார் என்று நீங்கள் அறியக்கடவீர்கள்.

3. இயேசு: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது, ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி பிதா குமாரன் பரிசுத்தஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள், **இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார். ஆமென்.** மத்.28:18-20. தேவனுடைய கட்டளையும், வாக்குத்தத்தமும் நமக்கு இப்படியிருக்க உண்மை கிறிஸ்தவர்களுக்கு விரோதமாக இந்த சட்டம் இயற்றப்பட்டிருக்குமாயின் இந்த மதமாற்றத் தடைச்சட்டத்தைக் குறித்து கலங்குவதேன்? உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு. ஆனாலும் திடன்கொள்ளுங்கள், நான் உலகத்தை ஜெயித்தேன் என்கிறாரே. யோ.16:33. நாம் பிரசங்கிக்கும் தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்து ஆம் என்றே இருக்கிறார். தேவனுடைய வாக்குத்தத்தங்கள் எல்லாம் அவருக்குள் ஆம் என்றும், ஆமென் என்றும் இருக்கிறதே. 2 கொரி.1:19,20.

4. என் சகோதரரே, மாம்சத்தோடும் இரத்தத்தோடும் அல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும் இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. ஆகையால் தீங்கு நாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாய் இருக்கும்படிக்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக்கொள்ளுங்கள். எபே.6:12-18. இராஜ்யத்தின் சுவிசேஷம் பூலோகம் எங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாக பிரசங்கிக்கப்பட வேண்டும். மத்.24:14. ஆதலால் சுவிசேஷப் பணிகளை நாம் தொடர்ந்து செய்து கொண்டேயிருப்போம். கர்த்தர் நமக்காக யுத்தம் செய்வார். சில அரசியல் கட்சித் தலைவர்களும், பெரும்பான்மையினரின் மதத்தலைவர்களும் தமிழ்நாடு முதலமைச்சரைக் குறித்தும், சிலர் மதமாற்றத் தடைச்சட்டத்தைக் குறித்தும் மேன்மை பாராட்டட்டும். நாமோ நம்முடைய தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைக் குறித்தே மேன்மைப் பாராட்டுவோம்.

5. எல்லாரும் வழிதப்பி, ஏகமாய் கெட்டுப்போனார்கள். நன்மைச் செய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை. ரோ.3:12. எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களானார்கள். ரோ.3:23. அந்த படியே நீதிமான் ஒருவனாகிலும் இல்லை. உணர்வுள்ளவன் இல்லை, தேவனைத் தேடுகிறவன் இல்லை. ரோ.3:10,11. அவர்கள் கண்களுக்கு முன்பாக தெய்வ பயம் இல்லை. தங்கள் நாவுகளால் வஞ்சனை செய்கிறார்கள். அவர்களுடைய உதடுகளின் கீழே பாம்பின் விஷம் இருக்கிறது. அவர்கள் வாய் சபிப்பினாலும் கசப்பினாலும் நிறைந்திருக்கிறது. அவர்கள் கால்கள் இரத்தம் சிந்துகிறதற்கு தீவிரிக்கிறது, நாசமும் நிர்பந்தமும் அவர்கள் வழிகளில் இருக்கிறது, சமாதான வழியை அவர்கள் அறியாதிருக்கிறார்கள் என்று எழுதியிருக்கிறது. ரோ.3:13-18.

6. இயேசு: நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்கவந்தேன் என்கிறார். மத்.9:13. ஆதலால் உங்கள் பாவங்கள் நிவிர்த்தி செய்யப்படும் பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக் குணப்படுங்கள் என்ற அறைகூவல் கொடுக்கப்பட்டுள்ளது. அப்.3:20, 17:30. மனந்திரும்பாவிட்டால் கெட்டுப்போவீர்கள் என எச்சரிக்கையும் கொடுக்கப்பட்டுள்ளது. லூக்.13:3. யோவான்ஸ்நானன், இயேசு, இயேசு கிறிஸ்துவின் பன்னிரு அப்போஸ்தலர்கள், பவுல் யாவரும் மனந்திரும்புங்கள் என்றே பிரசங்கித்தார்கள். மத்.3:2, மாற்.1:15,6:12, அப்.20:21. **தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்ட, நியமிக்கப்பட்ட, ஏற்படுத்தப்பட்ட ஊழியக்காரர்களில் யாரும் மதம்மாறுங்கள் என்ற அறைகூவலை ஒருபோதும் கொடுக்கவில்லை.** நாம் சர்வவல்லவரிடத்தில் மனந்திரும்பினால் திரும்பக்கட்டப்படுவோம். அக்கிரமத்தை நமது கூடாரத்தைவிட்டு தூரமாக்குவோம். ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டும் என்று விரும்பி, தேவன் நம் மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். 2 பேது.3:9. ஆதலால் உபவாசத்தோடும், அழுகையோடும், புலம்பலோடும், உங்கள் முழுஇருதயத்தோடும் கர்த்தரிடத்தில் திரும்புங்கள். உங்கள் வஸ்திரங்களையல்ல, உங்கள் இருதயத்தைக்கிழித்து கர்த்தரிடத்தில் திரும்புங்கள். அவர் இரக்கமும், மனஉருக்கமும், நீடியசாந்தமும், மிகுந்த கிருபையும் உள்ளவர். அவர் தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமாயிருக்கிறார்.

7. பாருங்கள், நற்காரியங்களை சுவிசேஷமாய் அறிவிக்க தேவன் அப்போஸ்தலர்களை, சுவிசேஷகர்களை அனுப்புகிறார். அவர்கள் பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்தஆவியினாலே சுவிசேஷத்தை பிரசங்கிக்கிறார்கள். ஆவியானவர் பாவத்தைக்குறித்தும், நீதியைக் குறித்தும், நியாத்தீர்ப்பைக் குறித்தும் உலகத்தை கண்டித்து உணர்த்துகிறார். யோ.16:8,9. தேவன் அவனுடைய இருதயத்தில் விசுவாசத்தைத் தொடங்குகிறார். எபி.12:1. விசுவாசம் அவனுடைய உள்ளத்தில் ஊற்றெடுக்கிறது. அவன் இருதயத்தில் குத்தப்படுகிறான். அவன் மனந்திரும்புகிறான். அவனுடைய மனதில் ஒரு மாற்றம் ஏற்படுகிறது. அவனுக்கு கிடைத்த பின்அறிவினால் முன்கொண்டிருந்த கருத்தில் மாற்றம் ஏற்பட்டு பின் எண்ணம் ஏற்படுகிறது. இப்படிப்பட்ட மனமாற்றத்தை அடிப்படையாகக் கொண்டதே கிறிஸ்தவ மனமாற்றம் ஆகும். மனந்திரும்புதல் பெரியதொரு காரியம். (Great is Repentance) ஆக, அவன் தன் பாவமன்னிப்புக்கென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்கிறான். இது தான் தேவனுடைய வார்த்தையை அடிப்படையாகக் கொண்ட மனமாற்றம், ஞானஸ்நானம். இங்கு மதமாற்றத்திற்கு இடமே இல்லை.

8. ஆனால் கள்ள, கபடமுள்ள வேலையாட்கள், கள்ள அப்போஸ்தலர்கள், கள்ளத் தீர்க்கத்தரிசிகள் மக்கள் மத்தியில் காணப்படுவதால்தான் குழப்பம் உண்டாகிறது. இவர்கள் நேர்வழியில் மக்கள் மனதில் ஒரு மனமாற்றத்தைக் கொண்டுவராமல், வியாதியிலிருந்து விடுதலை, பில்லிசூனியக்கட்டிலிருந்து விடுதலை, கடன் பிரச்சனைகளிலிருந்து விடுதலை, நீ கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டால் உனக்கு நாங்கள் அந்த சலுகைகளைச் செய்வோம், இந்தச் சலுகைகளைக் கொடுப்போம் எனக் கூறி நல்மனதோடே அப்படி செய்யாமல், ஜனங்கள் இவர்களை நாடி வைராக்கியம் பாராட்டும் பொருட்டு அப்படிச்செய்து மக்களை இம்மைக்குரிய நன்மைகளுக்காக கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிறார்கள். இவர்களால் தான் தேவனுடைய நாமம் தூஷிக்கப்படுகிறது. இவர்கள் தான் பொருளாதாரத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பொருளாசையை காட்டி மதமாற்றம் செய்கிறார்கள். மக்களை கிறிஸ்துவுக்குள் வழிநடத்துகிறோம் எனக் கூறி தங்கள் பிழைப்புக்கு வழி செய்கிறார்கள். இவர்களுக்கு தாங்கள் ஆதாயப்படுத்திய மக்களிடமிருந்து கிடைக்கும் தசமபாகம், காணிக்கை நல்ல வருமானமாக அமைந்துவிடுகிறது. மக்கள் மனதில் ஆசைகாட்டி மோசம் போக்குகிறார்கள். இவர்களை குறித்து இயேசு: மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, ஒருவனை உங்கள் மார்க்கத்தானாக்கும்படி சமுத்திரத்தையும் பூமியையும் சுற்றித்திரிகிறீர்கள், அவன் உங்கள் மார்க்கத்தானானபோது அவனை உங்களிலும் இரட்டிப்பாய் நரகத்துமகனாக்குகிறீர்கள் என்கிறார். மத்.23:15.

9. பல ஆண்டுகளுக்கு முன் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஒரு சபைக்குச் சென்றிருந்தேன். அப்பொழுது மேற்கூறியவிதமாக ஜனங்களை ஆதாயப்படுத்துவது குறித்து எனது பிரசங்கத்தில் கண்டித்தேன். பாஸ்டருக்கு என் மீது மிக்க வருத்தம். இதை அவர் முக பாவணையிலிருந்து அறிந்து கொண்டேன். சபை முடிந்தவுடன் அவர் என்னிடம் அதிகம் ஒன்றும் பேசிக்கொள்ளவில்லை. என்னை ஒரு

ஹோட்டலுக்கு அழைத்து சென்று சாப்பாடு வாங்கிக்கொடுத்து அனுப்பிவிட்டார். நான் பஸ் நிலையத்தில் சபைக்கு வந்திருந்த சில மக்களை சந்திக்க நேர்ந்தது. அவர்கள் என்னை அடையாளம் கண்டுகொண்டு என்னிடம் வந்து நாங்கள் பற்பல இடங்களில் இருந்து இங்கு சபைக் கூடுதலுக்கு வருகிறோம். பாஸ்டர் எங்களில் சிலருக்கு வீட்டு வாடகை கொடுக்கிறார், சிலர் வீட்டு பிள்ளைகளுக்கு படிப்புக்கு பணம் கொடுக்கிறார், சிலருக்கு பற்பல தேவைகளுக்காக பண உதவி செய்கிறார். இப்படியாக அவர் உதவிகள் செய்வதினால் தான் நாங்கள் சபை கூடுதலுக்கு வந்து செல்கிறோம். ஆதலால் நீங்கள் பிரசங்கத்தில் கூறியது சரியே என்றனர். பாஸ்டர் எங்களுக்கு மொத்தமாக ரூபாய் ஆயிரம் செலவு செய்துவிட்டு ரூபாய் ஐந்தாயிரத்துக்கு அவருடைய பெரிய பாஸ்டருக்கு கணக்கு அனுப்புகிறார் என அவரைப்பற்றி குறை கூறினார்கள். இவர்கள் தான் மதமாற்றம் செய்யும் பேர்வழிகள். இவர்களுக்கு இப்படிப்பட்ட மதமாற்றத் தடைச்சட்டம் தேவைதான்.

10. மற்றொரு முறை ஒரு வாலிபச் சகோதரன் என் வீட்டிற்கு வந்தான். சகோதரரே நான் சிலோன் பெந்தெகொஸ்தே சபையில் ஊழியக்காரனாக இருந்தேன். மும்பையில் உள்ள ஒரு சகோதரன் பெயரைக் கூறி, அவர் எனக்கு இக்கடைசிக்கால சத்தியத்தைக் கூறினார். எனக்கு அதில் ஒருமனம் ஏற்பட்டது. ஆனாலும் எனது பெந்தெகொஸ்தே சபை ஊழியத்தை விட்டு வெளியே வரத் தயக்கம் கொண்டிருந்தேன். அவர் எனக்கு மாதாமாதம் ஒரு தொகை கொடுப்பதாக வாக்குக் கொடுத்தார். ஓரிரு மாதம் பணமும் வந்தது. பின் நின்று விட்டது. நான் இப்பொழுது கஷ்டத்தின் மத்தியில் இருக்கிறேன். ஒரு சிலர் உங்களை குறித்துக் கூறி, உங்களை நேரில் பார்க்கச் சொன்னார்கள். ஆதலால் உங்களை காண வந்திருக்கிறேன் எனக் கூறி புலம்பினார். நான் அவரிடம் சகோதரனே, உங்களுக்கு கொடுக்க என்னிடம் பொன்னும் வெள்ளியும் இல்லை, நீங்கள் இப்பொழுது இளம் வயதில் இருக்கிறீர்கள், ஆதலால் ஏதாவது ஒரு வேலை செய்து கொண்டு கர்த்தர் கொடுத்த ஊழியத்தை செய்யுங்கள் எனக் கூற, அவரும் தனக்கு சித்திரத்தையல் வேலை (Embroidery ) தெரியும், அதற்கு புதியம்புத்தூரில் நல்ல வேலைவாய்ப்பு உண்டு எனக்கூற, சகோதரனே முதலில் அந்த வேலையை செய்து உங்கள் குடும்பதை ஆதரிக்க வழிசெய்யுங்கள் எனக் கூறி அனுப்பிவைத்தேன். இப்படிப்பட்ட மனமாற்றம் செய்கிறவர்களாலும், மனமாற்றத்துக்குரியவர்களாலும் தான் சத்தியமார்க்கம் தூஷிக்கப்படுகிறது. இன்று அவர் இக்காலத்துக்குரிய செய்தியில் இல்லை.

11. பல ஆண்டுகளுக்கு முன் வானொலியில் ஒரு சாட்சியை கேட்டேன். சாட்சி கூறியவர், இயேசு கிறிஸ்துவை எனது இரட்சகராக ஏற்றுக்கொள்ளும் முன் எனக்கு சரியான தொழில் கிடையாது, வருமானம் கிடையாது, கடன் பிரச்சனை, வறுமை தாண்டவமாடியது. ஆனால் இப்பொழுது பங்களா, கார் வசதியுடன் வாழ்கிறேன் என்றார். இப்படிப்பட்ட சாட்சியை கூறியவர் முதலாவது ஒரு உண்மை கிறிஸ்தவன் அல்ல. அடுத்து இவருடைய சாட்சியை ஒலிபரப்பினவர்கள் கள்ள, கபடமுள்ள வேலையாட்களே. இப்படிப்பட்ட வேலையாட்களுக்கு மதமாற்றத் தடைச்சட்டம் தேவைதான். இவர்கள் இம்மைக்குரிய நன்மைகளுக்காக ஒருவனை கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிறார்கள். ஆனால் இவர்கள் பரிதபிக்கப்படத்தக்கவர்கள் என வேதம் கூறுகிறது. 1 கொரி.15:19.

12. பிரியமானவர்களே, நாம் மதமாற்றம் செய்ய அல்ல, மனமாற்றம் செய்வதற்கே, ஒருவனுக்கு கிறிஸ்துவை சுட்டிக்காட்டி அவனை அவரிடத்தில் வழிநடத்துவதற்கே அழைக்கப்பட்டுள்ளோம். ஆதலால் இச்சட்டத்தால் உண்மை விசுவாசிகளுக்கும், உண்மையான ஊழியக்காரர்களுக்கும் எந்த விதமான ஆபத்தும் இல்லை. மதமாற்றத்தை அரசு தடுக்கலாம். ஆனால் மனமாற்றத்தை தடுக்க முடியாது. ஆதலால் இந்த சட்டத்தினால் தனி மனித சுதந்திரத்துக்கு எந்தவிதமான அச்சுறுத்தலும் இல்லை. மனப்பூர்வமாக ஒருவர் மனம் மாறினால் அவரைத் தடுக்க உலகத்தில் எந்தவிதமான சக்தியும் இல்லை! இல்லை!! கிறிஸ்து ஒருவனை மனந்திரும்பவே அழைக்கிறார். நாமும் அவ்வண்ணமாகவே அழைக்கிறோம்.

13. ஆனாலும் தமிழ்நாட்டிற்கு இந்தச் சட்டம் தேவைதானா என்றால், தேவையில்லை என்பதே என் கருத்து. தமிழ்நாட்டில் கடந்த காலங்களில் எடுத்த கிறிஸ்தவ மக்கள் தொகை கணக்கெடுப்பின் வாயிலாக கிறிஸ்தவருடைய எண்ணிக்கை இந்நாள்களில் குறைந்திருப்பதாகக் கூறுகிறார்கள். ஆக கிறிஸ்தவருடைய எண்ணிக்கை குறையும் பொழுது, மக்களை மதமாற்றம் செய்து கிறிஸ்தவ மார்க்கத்தில் சேர்க்கப்படுகிறார்கள் என்ற கூற்றுக்கு இடமில்லை. இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடு. இந்த சட்டம் பெரும்பான்மையான இந்துக்களுக்கும், சிறுபான்மையினராகிய கிறிஸ்தவ, முஸ்லீம்களுக்கும் மத்தியில் பிரிவினைகளையும், பகை, விரோதங்களையும் உண்டுபண்ணக்கூடியதாக இருக்கிறது. ஒருவரையொருவர் பழிவாங்கவும் இந்தச் சட்டம் உபயோகப்படுத்தப்படலாம் என அஞ்சப்படுகிறது. ஆதலால் இந்தச் சட்டத்தினால் தமிழ்நாடு கலங்கியிருக்கிறது. ஏன்னென்றால் இந்தத் தடைச் சட்டம் சிறுபான்மையினர்களுக்கு தீமைகளை விளைவிக்கக்கூடியதாகவே இருக்கிறது. ஸ்தாபன சபைகளை சார்ந்த பேர்கிறிஸ்தவர்களுக்கும் அவர்கள் மத்தியில் உள்ள ஊழியக்காரர்களுக்கும் இந்தச் சட்டம் பாதகமாக இருக்கலாம். ஆனால் உண்மை கிறிஸ்தவர்களுக்கும் அவர்கள் மத்தியில் உள்ள உண்மை ஊழியக்காரர்களுக்கும் இந்தச் சட்டம் எந்த விதமாக பாதிப்பையும் ஏற்படுத்தாது.

14. இதுவரை மதமாற்றம், மதமாற்றத் தடைச்சட்டம் குறித்து பார்த்தோம். இனி ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதலைக் குறித்துத் தியானிப்போம். இதுவரை தேவனிடத்திற்கு மனந்திரும்பி குணப்படாதவர்கள், இந்த செய்தித் தொகுப்பை தியானிப்பதன் மூலம் மனந்திரும்பி குணப்பட வேண்டும், மனந்திரும்புதலுக்கேற்ற கிரியைகளைச் செய்ய வேண்டும் என்பதே நான் தேவனிடத்திற்கு ஏறெடுக்கும் விண்ணப்பமும், வேண்டுதலுமாயிருக்கிறது. **தேவனுடைய வாக்கியங்களின் மூல உபதேசங்களில் ஒன்று மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள் என்பதாகும்.** இயேசு: தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று, மனந்திரும்பி சுவிசேஷத்தை விசுவாசியுங்கள் என்றார். இதை தான் யாருக்காக அனுப்பப்பட்டாரோ, அந்த காணாமல் போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடம் கூறினார். ஏனென்றால் இஸ்ரவேலருக்கு

மனந்திரும்புதலையும், பாவமன்னிப்பையும் அருளுகிறதற்காக அவரை அதிபதியாகவும், இரட்சகராகவும் தேவன் தமது வலதுகரத்தினாலே உயர்த்தினார். மாற்.1:15, மத்.15:24, அப்.5:31.

15. இந்த உபதேசம் காணாமற்போன இஸ்ரவேல் வீட்டாருக்கு மட்டுமல்ல, சபைக்காலத்தில் வாழும் நமக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதலை தேவன் புறஜாதியாருக்கும் அருளிச்செய்தார். பாருங்கள், அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர்போலிருந்தார், இப்பொழுதோ மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார். அப்.17:30. ஏனென்றால் சென்ற காலங்களில் அவர் சகல ஜனங்களையும் தங்கள் தங்கள் வழியிலே நடக்கவிட்டார். அப்.14:16. எல்லாரும் பாவம் செய்து, தேவமகிமையற்றவர்களானார்கள். ரோ.3:23. எல்லாரும் வழிதப்பி ஏகமாய்க் கெட்டுப்போனார்கள். ரோ.3:12. ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே பாவம், பாவத்தினாலே மரணமும் உலகத்தில் பிரவேசித்தது. ரோ.5:12. ஆதலால் எங்குமுள்ள மனுஷரெல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று கட்டளையிடுகிறார். ஆதலால் உங்கள் பாவங்கள் நிவிர்த்திசெய்யப்படும் பொருட்டு நீங்கள் மனந்திரும்பி குணப்படுங்கள் என்று அழைப்புக்கொடுக்கிறார். அப்.3:20. தேவன், ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம் மேல் நீடிய பொறுமையுள்ளவராய் இருக்கும் காலத்தை பிரயோஜனப்படுத்திக்கொள்ள வேண்டும் என நமக்கு அறிவுரை கூறப்பட்டுள்ளது. 2 பேது.3:9. அதே நேரத்தில் தேவதயவு நீ குணப்படும்படி உன்னை ஏவுகிறது. தேவனுடைய தயவு, பொறுமை, நீடிய சாந்தம் இவைகளில் ஐசுவரியத்தை அசட்டை செய்யாதே. உன் மனக்கடினத்திற்கும், குணப்படாத இருதயத்திற்கும் ஏற்றபடி தேவனுடைய நீதியுள்ள தீர்ப்பு வெளிப்படும் கோபாக்கினை நாளிலே உனக்காகக் கோபாக்கினையைக் குவித்துக் கொள்ளாதே என்று எச்சரிக்கையும் கொடுக்கப்பட்டுள்ளது. ரோ.2:4,5. ஏனென்றால் பிற்பாடு நீங்கள் ஆசீர்வாதத்தை சுதந்தரித்துக்கொள்ள விரும்பியும் ஆகாதவன் என்றும் தள்ளப்படுவீர்கள். நீங்கள் கண்ணீர் விட்டு, கவலையோடே தேடியும் மனம் மாறுதலைக் காணாமற்போவீர்கள். எபி.12:17.

16. கிறிஸ்து வேதவாக்கியங்களின்படி, நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்தெழுந்தபின், முதல் பெந்தெகொஸ்தே பண்டிகை அன்று வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியினால் மேல்வீட்டில் ஒருமனப்பட்டு ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்த 120 சீஷர்கள் நிரப்பப்பட்டார்கள். அன்று பேதுரு வானத்தின் கீழிருக்கிற சகல தேசத்தாரிலுமிருந்து வந்து எருசலேமில் வாசம் செய்த யூதர்களையும், தேவ பக்தியுள்ள மனுஷர்களையும் நோக்கி: நசரேயனாகிய இயேசுவைக் கொண்டு, தேவன் இஸ்ரவேலருக்குள்ளே பலத்த செய்கைகளையும், அற்புதங்களையும், அடையாளங்களையும் நடப்பித்து, அவைகளினால் தேவன் தம்மை இஸ்ரவேலருக்கு வெளிப்படுத்தினார். ஆனாலும் தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனையின்படியேயும், முன்னறிவிப்பின்படியேயும் நீங்கள் அந்த இயேசுவை பிடித்து, அக்கிரமக்காரருடைய கைகளினாலேயே சிலுவையில் ஆணியடித்து கொலை செய்தீர்கள். ஆனாலும் அந்த இயேசுவை தேவன் ஆண்டவரும் (Lord) கிறிஸ்து (Christ)வுமாக்கினார் என்றான். அப்.2:22,23,26. இயேசுவே, கர்த்தராகிய கிறிஸ்து என்று திருஷ்டாந்தப்படுத்தினான்.

17. தங்களுடைய மீட்புக்காக யாரை எதிர்நோக்கிக்கொண்டிருந்தார்களோ, அவரையே அவர்கள் சிலுவையில் ஆணியடித்து கொலை செய்தார்கள் என்பதைக் கேட்டவுடன், இருதயத்திலே குத்தப்பட்டார்கள். அப்.2:37. குற்ற உணர்வு அவர்கள் உள்ளத்தில் ஏற்பட்டது. மனஸ்தாபப்பட்டார்கள், மனங்கசந்து அழுதார்கள். பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து: சகோதரரே, நாங்கள் என்ன செய்யவேண்டும் என்று கேட்டார்கள். அதற்குப் பேதுரு: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் என்றான். அப்.2:38. மனந்திரும்புதலும், பாவமன்னிப்பும் இயேசுவின் நாமத்தினாலே பிரசங்கிக்கப்பட்டது. லூக்.24:47. இங்கு நாம் **பாவமன்னிப்புக்கு முதலாவது ஒருவனிடத்தில் மனந்திரும்புதல் தேவை** என்பதைக் காண்கிறோம். ஆம், **மெய்யான மனந்திரும்புதல் இல்லாமல் பாவமன்னிப்பு இல்லை.**

**18. ஒருவனுடைய இரட்சிப்புக்கு, பிரசங்கத்தைக் கேட்டு, இருதயத்தில் குத்தப்பட்டு, மனந்திரும்பி, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுதல் தான் முறையானது, முழுமையானது, இது ஒன்றே வழி, வேறொரு வழியில்லை. இதர முறைகள் யாவும் தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில் இல்லை. கர்த்தருடைய ஆவியே ஒருவனுக்கு அவனுடைய பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் கண்டித்து உணர்த்தி மெய்யான மனந்திரும்புதலை கொண்டு வர வேண்டும். யோ.16:7-11. இக்காலத்துக்குரிய செய்தியை உபதேசிக்கிறோம் எனக்கூறும் கள்ள, கபடமுள்ள வேலையாட்கள் ஜனங்களை மனந்திரும்புதலுக்கு வழிநடத்தாது, வியாதியிலிருந்து விடுதலை, பில்லிசூனியக்கட்டிலிருந்து விடுதலை, கடன் பிரச்சனையிலிருந்து விடுதலை எனக்கூறி ஜனங்களை இம்மைக்குரிய நன்மைகளுக்காக மாத்திரம் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கையுள்ளவர்களாக்கி, அவர்களை ஞானஸ்நானத்திற்கு வழிநடத்துகிறார்கள். இவர்கள் தேவசித்தத்துக்கு புறம்பாக அவருக்கென்று ஒரு ஊழியம் செய்கிறவர்கள், தங்கள் வயிற்றுப்பிழைப்புக்காக ஊழியம் செய்கிறவர்கள்.**

19. வேத வாக்கியங்களின் அடிப்படையில் சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறதற்கு அப்போஸ்தலன், சுவிசேஷகன் (பாஸ்டர் இல்லை) தேவனால் அனுப்பப்பட வேண்டும். அவர்கள் பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்தஆவியினாலே சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டும். அதைக் காதுள்ளவர்கள் கேட்க வேண்டும். தேவன் அவர்கள் உள்ளத்தில் விசுவாசத்தைத் தொடங்க வேண்டும். நித்திய ஜீவனுக்கு நியமிக்கப்பட்டவர்கள் எவர்களோ அவர்கள் விசுவாசிப்பார்கள். பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்கத் தேவனுக்கு பிரியமாயிற்று. அப்பொழுது அவர்கள் அவரைத் தொழுதுக்கொள்வார்கள், இரட்சிக்கப்படுவார்கள். ரோ.10.13-15, 1 பேது.1:12, அப்.13:48, 1 கொரி.1:21.

20. கிறிஸ்து வேதவாக்கின்படி தங்கள் பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, மூன்றாம்

நாளில் உயிர்தெழுந்தார் என்று விசுவாசித்தார்கள், விசுவாசம் உள்ளவர்களாகி ஞானஸ்நானம் பெற்று இரட்சிக்கப்பட்டார்கள். அப்.16:31, மாற்.16:16. மேலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவான் என்று தீர்க்கத்தரிசிகள் சாட்சி கொடுத்தபடி (அப்.10:43) அப்போஸ்தலர்களுடைய வார்த்தையை சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் பெந்தெகொஸ்தே நாள் அன்று ஏறக்குறைய மூவாயிரம் பேர் மனந்திரும்பி, தங்கள் பாவமன்னிப்புக்கென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றார்கள். அப்.2:41. இவ்வாறாக இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார். அப்.2:47. கிறிஸ்து தன்னுடைய பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்தெழுந்தார் என விசுவாசிக்கிறவன் முதலாவது தன் பாவங்களை அறிக்கை செய்து, மனந்திரும்பி, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் தண்ணீரில் ஞானஸ்நானம் பெறும்போது தேவன் அவனை தமது ஆவியினால் நிரப்புகிறார். இன்று அநேகர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தங்களுடைய பிரச்சனைகளிலிருந்து விடுதலையாக்கினார் என்பதன் பேரில் தங்கள் விசுவாசத்தை வெளிப்படுத்தி ஞானஸ்நானம் எடுக்கிறார்கள். அது தவறு. ஒருவன் மனந்திரும்பி ஞானஸ்நானம் எடுக்க வேண்டும். அதுவே சரியான வழி. ஆனால் இந்த வழியை இன்று பாஸ்டர்கள் போதிப்பதில்லை. மேலும் மந்தையில் சேர்க்கப்பட்ட ஆத்துமாக்களைக் கண்காணிப்பது தான் பாஸ்டரது பணி. மந்தையில் ஆத்துமாக்களை கொண்டு சேர்ப்பது பாஸ்டர் பணி அல்ல. அது அப்போஸ்தலர், சுவிசேஷகருடைய பணி. ஆக இன்று அநேக பாஸ்டர்கள் தங்கள் ஸ்தானத்தை அறியாதிருப்பதால் அவர்கள் கர்த்தரால் ஏற்படுத்தப்பட்டவர்கள் இல்லை. ஆதிநாட்களில் வியாதியிலிருந்து சுகமானேன், பில்லிசூனியக்கட்டுகள் அவிழ்க்கப்பட்டது, கடன் பிரச்சனைகளில் இருந்து விடுதலையடைந்தேன் எனக்கூறி யாரும் ஞானஸ்நானம் பெறவில்லை. அவர்கள் அவ்வாறாக வழிநடத்தப்படவுமில்லை.

21. ஒருவனுக்கு மனந்திரும்புதலையும், பாவமன்னிப்பையும் அருளுகிறவர் இயேசு. அப்.5:31. தேவன் புறஜாதிகளுக்கு ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதலை அருளிச்செய்தார். அப்.11:18. தேவன் மனந்திரும்புதலை அருளுகிறார். 2 தீமோ.2:25. பவுல், தீத்துக்கு எழுதும் பொழுது நாம் செய்த நீதியின் கிரியைகளின் நிமித்தம் தேவன் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்தஆவியினுடைய புதிதாக்குதலினாலும் இரட்சித்தார் என்கிறான். தீத்.3:5. இந்த மறுஜென்மமுழுக்குக்கு, அதாவது **ஞானஸ்நானத்திற்கு முன்பு ஒருவனுடைய உள்ளத்தில் மனந்திரும்புதல் தேவை. அப்.2:38. ஒருவனுடைய இரட்சிப்புக்கு முதற்படி மனந்திரும்புதல். The first step towards salvation is Repentance.**

22. மனந்திரும்புதல், இதன் கிரேக்கச் சொல் மெற்றனாயா (Metanoia). இதற்கு **பின்எண்ணம்** (Afterthought) என்று பொருள். இதன் ஆங்கிலேயச் சொல் ரிப்பெண்டன்ஸ் (Repentance). இதன் பொருள் செய்த குற்றத்திற்காக வருந்துதல் ஆகும். வருத்தம் ஒருவனுக்கு அவனுடைய கடந்தகால வாழ்க்கையில் அவனது சிந்தனைகள், செயல்கள், சென்ற வழிகள் அனைத்தும் பாவமானது, தேவனுக்கு விரோதமானது என்ற உணர்வு உள்ளத்தில் உருவாக, அதற்காக தன் இருதயத்தில் குத்தப்பட்டு, அவன் மனஸ்தாபப்படுவதால் அவனுடைய வாழ்க்கையில் ஒரு மாற்றம் ஏற்படுகிறது. அதாவது பிற்காலத்தில் கிடைத்த அறிவினால், பின்எண்ணத்தினால் முற்காலத்தில் கொண்டிருந்த கருத்துக்களில், எண்ணங்களில், நடைமுறைகளில் உண்டாகும் மாற்றம் மனமாற்றம்.

23. உதாரணமாக:

அ. முன்பு நான் தேவத்துவத்தில் மூவர் உண்டு என்ற எண்ணத்தில் இருந்தேன். தேவரீர் ஒரே தேவனும், ஒரே கர்த்தருமாய் இருக்கிறீர், ஒருவராய் மாத்திரம் இல்லாமல் ஒரே தத்துவமுடைய மூவராய் இருக்கிறீர் என தென்னிந்திய திருச்சபை ஜெப புஸ்தகம் பக்கம் 115ல் கூறுவதை விசுவாசித்தேன். தேவத்துவத்தில் மூவர் உண்டு என நம்பி மூவருக்கு ஆராதனை செய்தேன். பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்தஆவிக்கும் மகிமையுண்டாவதாக எனப் பாடினேன். இப்பொழுதோ பிதா குமாரன் பரிசுத்தஆவி ஒரே தேவனின் மூன்று தன்மைகள் (Attributes) என்ற பின் எண்ணம் கொண்டு தேவன் ஒருவர் என்ற விசுவாசத்துக்குள்ளானேன்.

ஆ. முன்பு குழந்தை ஞானஸ்நானம் பெற்றேன். அது தவறு, ஒருவன் மனந்திரும்பி, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் எடுக்க வேண்டும், அதோடு மட்டுமல்ல பிதா குமாரன் பரிசுத்தஆவி என்ற தேவனுடைய தன்மைகளின் பெயரை உச்சரித்து ஞானஸ்நானம் பெறாமல் மூன்று தன்மைகளுக்குரிய நாமத்தினால் அதாவது மனந்திரும்பி கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெறவேண்டும் என்ற பின்எண்ணம் கொண்டேன்.

இ. முற்காலத்தில் பெண்களின் தலைமுக்காடு அவர்கள் தங்கள் சேலை முந்தாணையால் தங்கள் தலைமயிரை மூடிக்கொள்வதே என்ற எண்ணத்தில் இருந்தேன். ஆனால் பிற்காலத்தில் அது தவறு, பெண்களின் நீண்ட தலைமயிரே அவர்களது தலைமுக்காடு என்ற பின்எண்ணம் கொண்டேன்.

ஈ. ஒரு பெண் அவள் தன் தலைமயிரை பின்னி விலை உயர்ந்த வஸ்திரங்களினால், பொன் ஆபரணங்களினால் அலங்கரிப்பதே அவளது அலங்கரிப்பு என்று நினைத்தேன். ஆனால் இப்பொழுது அப்படியல்ல, அவள் இருதயத்தில் மறைந்திருக்கிற சாந்தமும், அமைதலுமுள்ள ஆவியாகிய குணமே அவளது அழியாத அலங்கரிப்பு, அதோடு மட்டுமல்ல அவள் தன் கணவனுக்கு எல்லாவற்றிலும் கீழ்படிந்து தன்னை அலங்கரிக்க வேண்டும் என்ற பின்எண்ணம் கொண்டேன்.

உ. முன் பெண் பிரசங்கிகளை வரவேற்றேன். இப்பொழுதோ பெண்கள் தேவனுடைய வார்த்தையை கொண்டு பிரசங்கம் செய்யக்கூடாது, புருஷர்கள் மீது தேவனுடைய வார்த்தையை கொண்டு அதிகாரம் செலுத்தக்கூடாது என்று சத்தியத்தை அறிந்து பின்எண்ணம் கொண்டேன்.

ஊ. முன்பு பெண்கள் குடும்பப் பாரத்தை தாங்க வேலை செய்ய வேண்டும் என்ற எண்ணம் மனதில் இருந்தது. இப்பொழுது அது தவறு, அவள் வீட்டில் இல்லத்து ராணியாக இருக்க வேண்டும், அவள் வேலைசெய்ய வெளியே செல்லக்கூடாது என சத்தியத்தை அறியும் அறிவைப் பெற்று முன் எண்ணத்திலிருந்து ஒரு பின்எண்ணம் கொண்டேன்.

எ. முன்பு தசமபாகம் கொடுக்க வேண்டும் என்று அறிந்திருந்தாலும் அதைக்கொடுக்க முன்வரவில்லை. இப்பொழுதோ கைக்கு வருமானம் வந்தவுடன், உடனே தேவனுக்குச் செலுத்த வேண்டியதைச் செலுத்த வேண்டும் என்று தீர்மானித்து சம்பளம் வாங்கியவுடன் முதல் வேலையாக கர்த்தருக்குரிய தசமபாகத்தைச் செலுத்துகிறேன். தேவனை கொள்ளையடிக்க விரும்பவில்லை.

24. இப்படியாக முற்காலத்தில் கொண்டிருந்த கருத்துக்களில், எண்ணங்களில், நடைமுறைகளில் ஒரு பின்எண்ணம் உண்டாகி, அந்த எண்ணம் என்னில் மனந்திரும்புதலைக் கொண்டு வந்தது. பாவத்தை நேசித்தேன், பாவியாய் இருந்தேன். என் பாவங்களை அறிக்கை செய்து அவைகளை விட்டுவிட்டு பரிபூரணமாய் தேவனிடத்திற்கு திரும்பினேன். அதுவே மனந்திரும்புதல். இது குறித்து ஒரு பக்தன் கூறும் போது: பாவத்தில் விழுந்து வாழும் நூறு ஆண்டுகள் வாழ்வை விட தேவனிடத்தில் மனந்திரும்பின நூறு நாட்கள் வாழ்வே சிறந்தது என்கிறான். ஏனென்றால் மனந்திரும்பி குணப்படாத வாழ்க்கை, பாவ வாழ்க்கை. பாவத்தின் சம்பளம் மரணம்.

25. ஆக ஒருவன் உலகச்சிநேகத்தை, கண்களின் இச்சைகளை, மாம்சத்தின் இச்சைகளை, ஜீவனத்தின் பெருமைகளை முற்றிலுமாக வெறுத்து, தன்னை ஒரு ஜீவபலியாக தேவனுக்கென்று அர்ப்பணித்து, தன்னை தேவசித்தத்துக்கு ஒப்புக்கொடுத்தலே மனந்திரும்புதல் ஆகும். அது அவன் தேவனிடத்திற்கு திரும்புதல் ஆகும். கர்த்தருடைய ஆவியே பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயதீர்ப்பைக் குறித்தும் கண்டித்து உணர்த்தி அவனில் மெய்யான மனந்திரும்புதலைக் கொண்டு வருகிறது.ரோ.16:7-11. ஒருவன் தன் சுயமுயற்சியினால் தனக்குள் வருவித்துக்கொள்ளும் ஒரு மனநிலை மனந்திரும்புதல் அல்ல. கர்த்தரே மனந்திரும்புதலையும், பாவமன்னிப்பையும் ஒருவனுக்கு அருள வேண்டும். அப்.5:31, 11:18.

26. ஒருவனுடைய சன்மார்க்கஜீவியம் மனந்திரும்பின வாழ்க்கையல்ல. சன்மார்க்கஜீவியம் சுயநீதியாகும். தேவன் நாம் செய்த நீதியின் கிரியைகளின் நிமித்தம் நம்மை இரட்சிக்கவில்லை. தீத்.3:5. பாருங்கள், கொர்நெலியு, தேவபக்தியுள்ளவன், தன் வீட்டார் அனைவரோடும் தேவனுக்கு பயந்து வாழ்ந்தான். தான தர்மங்களைச் செய்தான். ஜெபத்தில் இடைவிடாது தரித்திருந்தான். ஆனால் அவனுடைய வாழ்க்கை ஒரு மனந்திரும்பின வாழ்க்கையல்ல. அப்.10:2, 11:14. பரிசேயனுடைய சுயநீதியின் மேல் தேவன் பிரியமாயிருக்கவில்லை. லூக்.18:11-13. சுயநீதியை நிலைநிறுத்துகிறவர்கள் தேவநீதிக்கு கீழ்படியவில்லை. ரோ.10:3. நாம் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும், விசுவாகம் மூலமாய் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவர்களாய் இருக்க வேண்டும். பிலி.3:9. ஏனென்றால் நம்முடைய சுயநீதி அழுக்கான கந்தைபோல் இருக்கிறது. ஏசா.64:16. ஆதலால் நாம் நம்முடைய சுயநீதிகளை அல்ல, தேவனுடைய மிகுந்த இரக்கங்களையே நம்பி, நம்முடைய விண்ணப்பங்களையும், வேண்டுதல்களையும் தேவனிடம் ஏறெடுக்க வேண்டும். தானி.9:18. சன்மார்க்கர்களைத் தேவன் அழிக்கிறார். யோபு.9:22. ஆதலால் ஒருவனுடைய சன்மார்க்க ஜீவியத்தைக் கொண்டு அவன் மனந்திரும்பின வாழ்க்கை வாழ்கிறான் எனக் கூறமுடியாது.

27. இயேசு கிறிஸ்துவை அறிந்திருக்கிற அறிவைக் கொண்டு ஒருவன் மனந்திரும்பின வாழ்க்கை வாழ்கிறான் எனக் கூற முடியாது. சீமோன் பேதுரு இயேசுவை நோக்கி: நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான். இயேசு அவனை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான் என்றார். மத்.16:16,17. லேகியோனும், இயேசுவே உன்னதமான தேவனுடைய குமாரனே என்று அறிக்கை செய்தான். மத்.5:7. ஆதலால் லேகியோனும் பாக்கியவான் என்று கூறமுடியுமா? பிசாசும் தேவன் ஒருவர் உண்டென்று விசுவாசித்து நடுங்குகிறான். யாக்.2:19. இந்த விசுவாசம் பிசாசை நீதிமான் ஆக்குமா? ஆக ஒருவனின் ஒரே தேவன் உண்டு என்று விசுவாசத்தைக்கொண்டு, இயேசு கிறிஸ்துவை அறிந்திருக்கிற அறிவைக்கொண்டு, சத்தியத்தை அறிந்திருக்கிற அறிவைக்கொண்டு, இக்காலத்துக்குரியச் செய்தியை அறிந்திருக்கிற அறிவைக்கொண்டு அவன் மனந்திரும்பின வாழ்க்கை வாழும் ஒரு இரட்சிக்கப்பட்டவன் என்று கூற முடியாது. பிசாசும் அவனுடையவர்களும் தங்கள் மூளையிலிருந்து விசுவாசிக்கிறார்கள். இது போர்விசுவாசியின் தன்மை. இவன் மணல்மேல் கட்டப்பட்ட வீடு. ஆனால் ஒரு உண்மையான விசுவாசி தன் இருதயத்திலிருந்து விசுவாசிக்கிறான். அதாவது தன் முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு பலத்தோடும் விசுவாசிக்கிறான். இவன் பதறான். இவன் கற்பாறையின் மேல் கட்டப்பட்ட வீடு.

28. ஒருவன் வரங்களைப் பெற்றிருப்பது மனந்திரும்பின வாழ்க்கை எனக் கூறமுடியாது. ரோ.11:29. வரங்களின் கிரியை, தேவனுடைய அழைப்பு ஒருவன் மனந்திரும்பாமலே நிலை நிற்பதாகும். For the gifts and callings of God are without repentance. பாருங்கள், அக்கிரம செய்கைகாரர்கள் தீர்க்கத்தரிசனம் உரைத்தார்கள், பிசாசுகளை துரத்தினார்கள், அற்புதஅடையாளங்களை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் செய்தார்கள். ஆனாலும் கர்த்தர் அவர்களை ஒருக்காலும் அறியவில்லை எனக் கூறினார். மத்.7:21-23. இயேசு கிறிஸ்துவை பின்பற்றாதவன் ஒருவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் பிசாசுகளை துரத்தினான். மாற்.9:38-41. ஆனால், நீங்கள் உங்கள் பாஸ்டர் பாடும் பாடல்களைக் கொண்டு, கொடுக்கும் செய்திகளைக் கொண்டு, இக்காலத்துக்குரிய செய்திகளை அறிந்திருக்கும் அறிவைக் கொண்டு, அவரைக் கொண்டு ஒருசில வியாதியஸ்தர்கள் சுகமாவதைக் கொண்டு அவர் தேவனால் ஏற்படுத்தப்பட்டவர் என்று நினைக்கிறீர்கள். அது முற்றிலும் தவறான எண்ணமாகும். அவர் தேவனுடைய மனுஷனாக இருப்பாராகில் சபையை சகல சத்தியத்துக்குள்ளும் வழிநடத்தி செல்வார். தேவனுடைய ஒவ்வொரு வார்த்தைக்கும், இக்காலத்திற்குரிய செய்திக்கும் முற்றிலுமாக கீழ்படிந்து சபையை வழிநடத்துவார். அந்த சபை சத்தியத்துக்கு தூணும், ஆதாரமுமாய் காணப்படும். இயேசு கிறிஸ்துவை பின்பற்றாதவனும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் பிசாசுகளை துரத்தினார்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் அற்புத அடையாளங்களை செய்கிறவர்கள் யாவரும் கிறிஸ்துவுக்குள் மனந்திரும்பின வாழ்க்கை வாழ்ந்து, ஊழியத்துக்காக கர்த்தரால் ஏற்படுத்தப்பட்டவர்கள் என நம்பி மோசம் போகாதீர்கள். அநேகர் இந்த நம்பிக்கையில்

மோசம் போனார்கள் கள்ள, கபடமுள்ள வேலையாட்களே நம் மத்தியில் அதிகமதிகம் என்பதை மறந்துவிடாதீர்கள்.

29. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்ற அனைவரும் மெய்யான மனந்திரும்புதலைக் கொண்டவர்கள் எனக் கூறமுடியாது. உதாரணமாக மாயவித்தைக்காரனாகிய சீமோன் விசுவாசித்து கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றான். அப்.8:13. ஆனாலும் தேவனுடைய வரத்தை பணத்தைக்கொண்டு சம்பாதிக்க நினைத்தான். அப்.8:17,18. அவனுடைய மனந்திரும்புதல் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதல் இல்லை. இவ்வாறாக நம் மத்தியிலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்று, தேவ சித்தத்துக்கு புறம்பாக தன்னை ஒரு பாஸ்டராக அழைத்துக்கொண்டு தசமபாகம், காணிக்கைக்காக ஊழியம் செய்கிறவர்கள் உண்டு. வெளிநாட்டு சகோதரர்களை நம்பி, அவர்களுடைய பண உதவியை நம்பி, அவர்கள் உபதேசிக்கும் ஒவ்வொரு வார்த்தைக்கும் ஆம், ஆமென் என்றும் கூறிக்கொண்டு, அவர்கள் உபதேசங்களை தங்கள் உபதேசங்களாகக்கொண்டு ஊழியம் செய்கிறவர்கள் உண்டு. தன்னுடைய ஜெபம் வியாதியஸ்தர்களை குணமாக்குகிறது என்று கூறிக்கொண்டே, பொருளாசை மீது கண் வைத்து வியாதி குணமாக்கப்பட்டவர்களிடம் காணிக்கை பெற்று ஊழியம் செய்கிறவர்களும் உண்டு. இவ்வாறாக பணத்துக்காக, புகழுக்காக ஊழியம் செய்து வருகிறவர்களை அடையாளம் கண்டுகொண்டு அவர்களை விட்டு விலகுங்கள். காணிக்கை, தசமபாகம் கொடுக்கிறவன் குடிசையில் பணக்கஷ்டத்தின் மத்தியில் வாழ்கிறான். காணிக்கை, தசமபாகம் பெறுகிறவன் பங்களாவில் சுகபோகமாக வாழ்கிறான். இது தான் இன்றைய ஊழியம். இது தான் இன்றைய வஞ்சகம். இதை என் ஜனங்கள் என்றுதான் உணர்வார்களோ!

30. ஒருவன் கற்பனைகள், பிரமாணங்கள், கட்டளைகளைக் கைக்கொண்டு வருவதால் அவன் மனந்திரும்பின வாழ்க்கை வாழ்கிறான் என்று கூறமுடியாது. இவைகளை கடைபிடித்து வந்த ஒரு வாலிபன், இயேசுவிடம் நித்திய ஜீவனை அடைவதற்கு நான் எந்த நன்மைகளை செய்ய வேண்டும் என்று கேட்டான். மத்.19:16-22. கற்பனைகளை, பிரமாணங்களை, கட்டளைகளைக் கைக்கொண்டவர்கள் நித்தியஜீவனைப் பெறவில்லை. ஏனென்றால் அவர்கள் மனந்திரும்பி இரட்சிக்கப்படவில்லை. மேலும் பரிசேயனும் அவைகளை கடைபிடித்து வந்தான். ஆனாலும் அவன் நீதிமானாக்கப்படவில்லை. லூக்.18:12-14. ஆக மனுஷருடைய, தேவனுடைய கற்பனைகளுக்கு கீழ்படிந்து நடப்பதும், பரிசேயனுடைய நீதியும் மனந்திரும்பின வாழ்க்கை எனக் கூற முடியாது. கொலோ.2:21,23.

31. ஜெபஆலயத் தலைவன் மனந்திரும்பின வாழ்க்கை வாழவில்லை. ஜெபஆலயத் தலைவனாகிய கிறிஸ்பு சுவிசேஷத்தைக் கேட்டு, விசுவாசித்து, மனந்திரும்பி பாவமன்னிப்புக்கென்று அவன் வீட்டார் அனைவரோடும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றார்கள். அப்.18:8. அப்படியானால் ஞானஸ்நானத்துக்கு முன் அவனது பதவி, வாழ்க்கை ஒரு மனந்திரும்பாத வாழ்க்கையாகும். இன்றைக்கு நம் மத்தியில் உள்ள ஸ்தாபன சபைகளின் குருமார்கள், பாஸ்டர்கள், இக்காலத்துக்குரிய செய்தியில் இருக்கிறோம் எனக் கூறும் அநேக பாஸ்டர்கள் இந்த ரகத்தைச் சேர்ந்த இரட்சிக்கப்படாதவர்களே. இவர்களும் கிறிஸ்புவைப் போன்று இரட்சிக்கப்பட வேண்டும் என்பதே நமது வாஞ்சை.

32. பொதுவாக சபைகளில் மனுஷர்களால் ஏற்படுத்தப்பட்ட பதவிகளில் உள்ளவர்கள் உதாரணமாக மூப்பர்கள், டீக்கன்கள் மனந்திரும்பாத வாழ்க்கை வாழ சாத்தியம் உண்டு. ஆனால் எபே.4:11-13ன்படி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தி அடைவதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள ஊழியர்கள் மனந்திரும்பாத வாழ்க்கை வாழ, சத்தியத்தை அறியாத வாழ்க்கை வாழச் சாத்தியமில்லை. அவர்கள் அனைவரும் கர்த்தரால் ஏற்படுத்தப்பட்டவர்கள், இரட்சிக்கப்பட்டவர்கள், சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தவர்கள். ஆனால் கள்ள, கபடமுள்ள வேலையாட்கள் சபையில் நிறைந்திருப்பதால், அவர்களுடைய கிரியைகளினாலும், உபதேசங்களினாலும் சத்தியமார்க்கம் தூஷிக்கப்படுகிறது.

33. தேவனைக் குறித்து வைராக்கியம் உள்ளவர்கள், கல்விமான்கள், வேதப்பிரமாணத்தின்படி போதிக்கப்பட்டவர்கள் அனைவரும் மனந்திரும்பின வாழ்க்கையுடையவர்கள் எனக் கூறமுடியாது. உதாரணமாக பவுலின் முந்தின வாழ்க்கை, சகல ஜனங்களாலும் கனம் பெற்ற நியாயசாஸ்திரியாகிய கமாலியேலின் வாழ்க்கை.

34. தேவனை விசுவாசித்து, அவரை ஆராதித்து வருகிறவர்கள், சுவிசேஷ கூட்டங்களுக்கு ஒழுங்காக சென்று வருகிறவர்கள் அனைவரும் மனந்திரும்பின வாழ்க்கை வாழ்ந்து வருகிறார்கள் எனக் கூறமுடியாது. உதாரணமாக லீதியாள் தேவனை ஆராதித்து வந்தாள். ஜெபக்கூட்டங்களுக்கு ஒழுங்காக சென்று வந்தாள். ஆனாலும் அவள் மனந்திருந்தின வாழ்க்கை வாழவில்லை. ஒரு நாள் பவுல் பிரசங்கிக்க, ஜெபக்கூட்டத்தில் அவன் பிரசங்கத்தைக் கேட்டு, மனந்திரும்பி, பாவமன்னிப்புக்கென்று அவளுடைய வீட்டார் அனைவரோடும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றாள். அப்.16:14. அவளுடைய பிந்தின வாழ்க்கையே மனந்திரும்பின வாழ்க்கை.

35. கர்த்தருக்கு செலுத்த வேண்டிய தசமபாகத்தைக் கொடுக்காதவர்கள், காணிக்கைகளை ஒழுங்காகச் செலுத்தாதவர்கள் அனைவரும் மனந்திரும்பாதவர்களே. தேவனை வஞ்சிக்கிறவர்கள் எப்படி மனந்திரும்பின வாழ்க்கை வாழ்கிறார்கள் எனக் கூறமுடியும்? மல்.3:8,9. சபையின் பண்டகசாலைக்கு வரும் தசமபாகத்தை இதர ஊழியங்களுக்குப் பகிர்ந்து கொடுக்காது தனது தொந்தியிலே போட்டுக்கொள்ளும் பாஸ்டர்கள் கர்த்தரால் ஏற்படுத்தப்பட்டவர்கள் அல்ல. அவர்கள் மனந்திரும்பினவர்களும் அல்ல. அவர்கள் தேவசித்தத்துக்கு புறம்பாக அவருக்கென்று ஒரு ஊழியம் செய்கிறவர்கள் தங்கள் வயிற்றிற்கே ஊழியம் செய்கிறவர்கள். இவன் இதர ஊழியங்களுக்குரிய தசமபாகத்தை பலாத்காரமாய் பறித்துக்கொண்டு, தன் அயலானாகிய இதர ஊழியர்களுக்கு இடுக்கண் செய்கிறவனே. ஆதலால் இவன் கர்த்தருக்கு விரோதமாய் அநியாயம் செய்கிறவன். மெய்யான

மனந்திரும்புதலைப் பெற்றவர்கள் சத்தியத்தை அறியும் அறிவையும் அடைந்திருப்பார்கள்.

36. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்று, தன் மயிரைப் பின்னி, பொன் ஆபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொண்டு, புறம்பாக தன்னை அலங்கரிப்பவள் தன் செல்வ செருக்கினால் சுகபோகமாக வாழ்கிறவள். அவள் உயிரோடே செத்தவள். அவள் மனந்திரும்பாதே ஞானஸ்நானம் பெற்றவள். ஏனென்றால் அவள் இன்னும் சத்தியத்தை அறிகிற அறிவை அடையவில்லை.

37. சகோதரன் எனப்பட்ட ஒருவன், உனக்கு விரோதமாக குற்றஞ்செய்தால், அவனை கடிந்துகொள். அவன் மனஸ்தாபப்பட்டால் அவனை மன்னி. லூக்.17:3,4. ஆனால் திரும்பத்திரும்ப அதே குற்றத்தை செய்துகொண்டு வருவானாகில், அவன் தான் செய்த குற்றத்துக்காக மனஸ்தாபப்பட்டானேயல்லாமல் மனந்திரும்பவில்லை. மனந்திரும்பியிருந்தால் அவன் அந்த குற்றத்தை மீண்டும் செய்ய மாட்டான். இங்கு அவனுடைய குற்ற உணர்வு மனஸ்தாபத்தைக் கொண்டு வந்ததேயன்றி மனந்திரும்புதலைக் கொண்டு வரவில்லை. ஒருவனுக்கு தன் தவறைக் குறித்த, பாவத்தைக் குறித்த குற்றவுணர்வு மனஸ்தாபத்தையும், மனஸ்தாபம் மனந்திரும்புதலையும் கொண்டுவர வேண்டும்.

38. **உண்மையான மனந்திரும்புதலில் ஒரு அம்சம் பாவ உணர்வை, குற்ற உணர்வை உள்ளத்தில் கொண்டு வந்து, இருதயத்தில் குத்தப்படுதலாகும்.** வானத்தின் கீழிருக்கிற சகல தேசத்தாரிலுமிருந்து வந்த யூதர்களையும், தேவபக்தியுள்ள மனுஷர்களையும் பேதுரு நோக்கி: நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினார் என்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவீர்கள் என்றான். இதைக் கேட்டவர்கள் இருதயத்திலே குத்தப்பட்டார்கள். அப்.2:37. மனந்திரும்புதலுக்குரிய விசுவாசத்தை தேவன் அவர்கள் உள்ளத்தில் தொடங்கினார். எபி.12:1.

39. **இருதயத்தில் குத்தப்பட்ட பின்பு மனங்கசந்து அழுவதாகும்.** அப்பொழுது கர்த்தர் திரும்பி பேதுருவை நோக்கிப் பார்த்தார். சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்று தரம் மறுதலிப்பாய் என்று கர்த்தர் தன்னிடத்தில் சொன்ன வசனத்தை உடனே பேதுரு நினைவு கூர்ந்து வெளியே போய், மனங்கசந்து அழுதான். லூக்.22:62,63. ஆயக்காரன் தன் மார்பில் அடித்துக்கொண்டான். லூக்.18:13.

40. **மனங்கசந்து அழுதபின்பு ஒருவன் தன் பாவத்தை அறிக்கை செய்ய வேண்டும்.** கெட்ட குமாரனுக்கு புத்தி தெளிந்த போது, அவன் என் தகப்பனுடைய வீட்டில் அவர் கூலிக்காரராய் எத்தனையோ பேருக்கு பூர்த்தியான சாப்பாடு இருக்கிறது. நானோ பசியினால் சாகிறேன். நான் எழுந்து என் தகப்பனிடத்துக்குப் போய் தகப்பனே பரத்துக்கு விரோதமாகவும், உமக்கு முன்பாகவும் நான் பாவம் செய்தேன், இனிமேல் நான் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுகிறதுக்குப் பாத்திரவான் அல்ல, உம்முடைய கூலிக்காரரில் ஒருவனாக என்னை ஏற்றுக்கொள்ளும் என்பேன் என்று சொல்லி, எழுந்து புறப்பட்டு தன் தகப்பனிடத்தில் வந்தான். லூக்.15:18-20.

41. **பாவத்தை அறிக்கை செய்தபின் அதை முற்றிலும் விட்டுவிட வேண்டும்.** விசுவாசித்தவர்களில் அநேகர் வந்து தங்கள் செய்கைகளை வெளிப்படுத்தி அறிக்கையிட்டார்கள். மாயவித்தைக்காரராயி ருந்தவர்களில் அநேகர் தங்கள் புஸ்தகங்களை கொண்டுவந்து எல்லாருக்கும் முன்பாக சுட்டெரித்தார்கள். அப்.19:18,19. இது பாவச்செயல்களை அறிக்கையிட்டு விட்டுவிடுவதாகும். நீதி.28:13. நீதியை விரும்பி அக்கிரமத்தை வெறுத்தார்கள். எபே.1:9.

42. **பாவத்தை அறிக்கை செய்து, அதை முற்றிலுமாக விட்டுவிட்டு, பின் முடிவாக செய்த பாவத்துக்கு, குற்றங்களுக்கு ஒருவன் பரிகாரம் செய்யும் போது உண்மையான இரட்சிப்பு கிடைக்கிறது.** உதாரணமாக சகேயு கர்த்தரை நோக்கி: ஆண்டவரே, என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன். நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால் நாலத்தனையாக திரும்பிச் செலுத்துகிறேன் என்றான். இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது. இவனும் ஆப்பிரகாமுக்கு குமாரனாயிருக்கிறானே என்றார். லூக்.19:8,9. ஒருவன் மனந்திரும்பி, தேவனிடத்திற்கு திரும்பினால் மட்டும் போதாது, மனந்திரும்புதலுக்கேற்ற கிரியைகளையும் செய்ய வேண்டும். அப்.26:20. அவ்வாறாக மனந்திரும்புகிற ஒரே பாவியின் நிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும். லூக்.15:7.

43. அக்டோபர் மாதம், நான் சென்னையில் இருந்த நாட்களில் ஒரு முஸ்லீம் மார்க்கத்தாரை சந்திக்க நேர்ந்தது. அவர் என்னிடம் ஒருவன் வட்டிக்கு பணம் கொடுத்து, மக்களை ஏமாற்றி, அரசாங்கத்தை ஏமாற்றி, தகாத முறையில் சொத்து சுகங்களைச் சேர்த்து, பின் ஒரு நாள் நான் மனந்திரும்பிவிட்டேன், இயேசுவை என் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டேன், அவர் என்னுடைய பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்த்தெழுந்தார் என்று விசுவாசித்து, நானும் அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டு, அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டு அவருடனே கூடப்பிழைத்திருக்கிறேன். என் பாவஜீவியத்திலிருந்து அவர் என்னை விடுதலையாக்கிவிட்டார், நான் இப்பொழுது அவருடையவன், அவர் என்னுடையவர் என அறிக்கை செய்தால் போதுமா? கொள்ளையடித்து சம்பாத்தியம் பல தலைமுறைக்கு சேர்த்து வைத்துவிட்டு நான் இரட்சிக்கப்பட்டுவிட்டேன் என்று கூறுகிறார்களே! இது சரியா? என்றுக் கேட்டார். நான் அவருக்கு சகேயுவின் வாழ்க்கையைக் கூறி அதுதான் உண்மையான மனந்திரும்புதல், இரட்சிப்பு எனக் கூற அவர் அதிலும் திருப்தியடையவில்லை. ஒருவன் அநியாயமாக சம்பாதித்து பின் அதற்கு ஈடாக தன் ஆஸ்தியில் பாதி மற்றும் ஒரு ரூபாய்க்கு நான்கு ரூபாய் கொடுக்க முன்வந்தால் அவன் எத்தனை மடங்கு சம்பாதித்திருக்க வேண்டும். ஆதலால் அவன் தான் நேர்வழியில் சம்பாதித்ததுப் போக தவறானவழியில் சம்பாதித்த அனைத்தையும் திரும்பச் செலுத்த வேண்டும் எனக் கூறினார். அவர் கூறியதிலும் உண்மைகள் இருப்பதாகவே எனக்குத் தோன்றியது.

44. சில வேளைகளில் ஒருவனிடத்தில் மெய்யான மனந்திரும்புதலுக்கேற்ற கிரியைகள் காணப்பட்டாலும், அது பிற்காலத்தில் அவன் உள்ளத்தில் ஏற்பட்ட ஒருவிதமான பயமாகத்தான் தெரிகிறது. உதாரணமாக பார்வோனையும், அவனுடைய அறிக்கையையும் பாருங்கள், நான் பாவஞ்செய்தேன், கர்த்தர் நீதியுள்ளவர், நானும் என் ஜனமும் துன்மார்க்கர்கள் என்றான். யாத்.9:27,35. வாதை நின்றபின் அவன் தன் இருதயத்தை கடினப்படுத்தினதைக் காண்கிறோம். இவனைப் போன்று சிலர் இம்மைக்குரிய, இப்பிரபஞ்சத்துக்குரிய நன்மைகளுக்காகவே கர்த்தரிடத்தில் திரும்புகிறார்கள். நன்மைகளை பெற்றவுடன் பின்வாங்கிப் போகிறார்கள். சிலர் ஒரு நல்ல மாப்பிள்ளை / பெண் கிடைத்திருக்கிறது என்பதற்க்காக ஞானஸ்நானம் பெற்று திருமணம் செய்கிறார்கள். இவர்களை என்ன என்று சொல்வது?

45. உள்ளத்தில் மெய்யான மனந்திரும்புதலைப் பெற்றவர்கள்:

அ. இனி தனக்கென்று பிழைத்திருக்காமல், தங்களுக்காக மரித்து உயிர்தெழுந்தவருக்கென்று பிழைத்திருக்கிறார்கள். 2 கொரி.5:15. இவர்கள் முதலாவது தேவனுடைய இராஜ்யத்துக்குரியவைகளை தேடுகிறார்கள். அதாவது முதலாவது தேவனுடைய இராஜ்யத்துக்குரியது பின்பு தனது குடும்பத்துக்குரியது, அதன் பின்பு தனக்குரியது. இவர்கள் தங்கள் ஜீவனை வெறுத்தவர்கள். லூக்.14:26. இவர்கள் தங்கள் சுயவிருப்பு வெறுப்புகளிலிருந்து திரும்பி தங்களைத் தேவனுடைய சித்தத்துக்கு முற்றிலுமாக ஒப்புக்கொடுத்து மனந்திரும்பினவர்கள்.

ஆ. இவர்கள் இருளைவிட்டு ஒளியினிடத்துக்கும், சாத்தானுடைய அதிகாரத்தைவிட்டு தேவனிடத்திற்கும் திரும்பினவர்கள். அப்.26:18. தேவன் ஒளியில் இருக்கிறதுபோல இவர்களும் ஒளியிலே நடந்து, ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்பார்கள். 1 யோ.1:7. ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியம் இல்லாததால் இவர்கள் அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பார்கள். இவர்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருப்பதினால் அநீதியுடன் இவர்களுக்கு சம்பந்தம் இருக்காது. இருளுடன் ஐக்கியம் இருக்காது, அவிசுவாசிகளுடன் பங்கு இருக்காது, விக்கிரகங்களுக்கும் இவர்களுக்கும் சம்பந்தம் இருக்காது, இவர்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டு பிரிந்துபோய் அசுத்தமானதை தொடாதிருப்பார்கள். 2 கொரி.6:14-18.

இ. இவர்கள் பாவத்திலிருந்து, கண்களின் இச்சைகளிலிருந்து, மாம்சத்தின் இச்சைகளிலிருந்து, ஜீவனத்தின் பெருமைகளிலிருந்து திரும்பினவர்கள். கலா.5:19-21, கொலோ.3:5, 1 யோ.2:15,16. அதாவது பாவத்தின் கிரியைகளிலிருந்து திரும்பிவிட்டார்கள்.

ஈ. இவர்கள் உலகத்திலும் உலகத்தில் உள்ளவைகளிலும் அன்பு கூறுவதில்லை. உலகத்தை விட்டுத் திரும்பினவர்கள். 1 யோ.2:15, யாக்.4:4. உலகத்தின் பெருமை, செல்வத்தின் பற்று அனைத்தையும் விட்டுத் திரும்பினவர்கள். இவர்கள் சாத்தானுடைய அதிகாரத்திலிருந்து திரும்பிவிட்டார்கள். அப்.26:18. இவர்களுக்கு அவனிடத்தில் பங்கு இல்லை.

உ. இவர்களுடைய குடியிருப்பு பரலோகத்தில் இருப்பதால், பூமியில் உள்ளவைகளை அல்ல, மேலானவைகளையே நாடுகிறவர்கள். கொலோ.3:2. இனி இவர்கள் உலகத்தை பின்னிட்டு பார்க்க மாட்டார்கள். ஆதி.19:26, லூக்.9:62.

ஊ. ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதலைப் பெற்ற இவர்கள் அப்.11:18. தங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து விட்டார்கள். ரோ.6:13. அதாவது தங்களை ஜீவபலியாக தேவனுக்கென்று ஒப்புக்கொடுத்துவிட்டார்கள். இவர்கள் தேவனை நோக்கித் திரும்பிவிட்டார்கள். சகரி.1:3. அவரும் இவர்களிடத்திற்குத் திரும்பிவிட்டார்.

46. மனந்திரும்புதல் குணப்படுதலுடன் பிணைக்கப்பட்டுள்ளது. குணப்படுதல், பரிசுத்தஆவியை பெறுதலாகும். லூக்.22:32. நாம் நம்முடைய பாவங்கள் நிவிர்த்தி செய்யப்படும் பொருட்டு மனந்திரும்பி குணப்பட வேண்டியவர்களாயிருக்கிறோம். அப்.3:20. விசுவாசம் மனந்திரும்புதலைக் கொண்டுவருகிறது. மனந்திரும்புதல் குணமாக்கப்படுதலுடன் சம்பந்தப்பட்டுள்ளது. மனந்திரும்பு, வியாதியில் இருந்து விடுதலை பெறு. மாற்.12:13. மனந்திரும்புதலே சத்தியத்தை அறியும் அறிவை கொண்டு வருகிறது. 2 தீமோ.2:25. மனந்திரும்புதல் நித்திய ஜீவனை சுதந்தரித்துக்கொள்ள வழிவகுக்கிறது. அப்.11:18. மனந்திரும்புதல் ஒருவனை பூரண புருஷனாக மாற்றுகிறது. எபி.6:1,2.

47. முடிவாக பிரியமானவர்களே, திரும்புங்கள், பொருளாசையாகிய விக்கிரகாராதனையை விட்டுத்திரும்புங்கள், 2கொரி.6:14-17 வரை கூறப்பட்டுள்ள அருவருப்புகளையும் விட்டு உங்கள் முகங்களைத் திருப்புங்கள். உங்களுடைய எல்லா மீறுதல்களையும் விட்டுத் திரும்புங்கள். அப்பொழுது அக்கிரமம் உங்கள் கேட்டுக்குக் காரணமாயிருப்பதில்லை. மனந்திரும்புங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள். சாகிறவனுடைய சாவை நான் விரும்புகிறதில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார். துன்மார்க்கன் தன் வழியைவிட்டுத் திரும்பிப்பிழைப்பதையே விரும்புகிறேன் என்று என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்று கர்த்தர் உரைக்கிறார். நீங்கள் இந்த செய்திதொகுப்பைத் தியானித்த பின் மனந்திரும்புகிறதற்கேதுவாகத் துக்கப்பட்டதற்காகவே சந்தோஷப்படுகிறேன். தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது. லௌகீக துக்கமோ மரணத்தை உண்டாக்குகிறது. மனந்திரும்பி சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டவன், அதினால் மறுருபப்படுத்தப்பட்டு, எல்லாவற்றையும் புதிதாகக் காண்கிறான். 2 கொரி.6:17. ஏனென்றால் அவனுக்குள் தேவனுடைய ஆவி வாசமாயிருந்து, அவன் தேவனுடைய ஆலயமாயிருக்கிறான்.

48. இந்த செய்தித் தொகுப்புக்கு எதிராக பேசுகிறவர்கள் சத்தியத்தை அறியும்படி தேவன் அவர்களுக்கு மனந்திரும்புதலை அருளத்தக்கதாகவும், பிசாசானவனுடைய இச்சைகளின்படி செய்ய அவனால் பிடிபட்டிருக்கிற அவர்கள் மறுபடியும் மயக்கந்தெளிந்து அவன் கண்களுக்கு நீங்க கர்த்தரை வேண்டிக் கொள்ளுங்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபை உங்களுடனே கூட இருப்பதாக. கிறிஸ்து இயேசுவுக்குள்ளான என்னுடைய அன்பு உங்களெல்லாரோடுங்கூட இருப்பதாக. ஆமென்.

நவம்பர், 2002

கிறிஸ்துவின் அன்பில்
**சகோ. காலேப் யோசுவா**